08.04.2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் விழுப்புரம் )

அமர்வு வழக்கு எண்.107/2018

அ.சா.19

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆறுமுகம் | | |
| த/பெ | கட்டைய கவுண்டர் | | |
| கிராமம் | கண்டம்பாக்கம் | தொழில் | விவசாய வேலை |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 60/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

என்னிடம் தற்போது காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாம் கையெழுத்து என்னுடையதுதான் அந்த கையெழுத்தை நான் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் ஊர் பேருந்து நிறுத்தம் அருகில் போட்டேன். என்னிடம் காவல்துறையினர் வந்து கையெழுத்து வாங்கினார்கள். என் முன்பாக இருசக்கர வாகனம் எதையாவது கைப்பற்றினார்கள் என்றால் இல்லை. என்னுடன் என் ஊரைச் சேர்ந்த கலியமூர்த்தி என்பவர் கைரேகை வைத்தார். போலீசார் இதுகுறித்து என்னை விசாரணை செய்தார்கள். 29-08-2014 தேதியில் முருகன் என்பவர் இறந்தது குறித்து கேள்விப்பட்டு ஊரில் வந்து பார்த்தேன். அவர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. இதுகுறித்து என்னை காவல்துறையினர் விசாரணை செய்யவில்லை.

(மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்ததன் பேரில், சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்படுகிறார் )

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

கடந்த 29-08-2014 ஆம் தேதி எங்கள் ஊரைச் சேர்ந்த முருகன் ஒரு கொலை வழக்கு சம்பந்தமாக கடந்த 03-10-2014-ம் தேதி காலை 11:30 மணியளவில் தாலுக்கா காவல் ஆய்வாளர் எதிரி அன்பரசு என்பவரை கைது செய்து விசாரித்த போது, அவர் தான் பயன்படுத்திய பி ஒய் 01 பிஏ 6187 என்ற பதிவெண் கொண்ட ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தை எங்கள் முன்னிலையில் போலீசார் எதிரியிடமிருந்து கைப்பற்றி அந்த இடத்தில் தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த கலியமூர்த்தி என்பவரும், சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், போலீசார் விசாரணையை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை